1971 டிசம்பர் 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1971-ம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

(3) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) தமிழ் நாடு 1971-ம் ஆண்டு பந்தைய—கேளிக்கை வரி (திருத்த) சட்டமுன்வடிவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு 1971-ம் ஆண்டு பந்தைய—கேளிக்கை வரி (திருத்த) சட்டமுன்வடிவை இப்பேரவையில் அறிமுகம் செய்வதற்கு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

(4) அரசினர் சட்டமுன்வடிவுகள்—தொடர்ச்சி

(ஆ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு பந்தைய கேளிக்கை வரி (திருத்த) சட்டமுன்வடிவு.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, தமிழ் நாடு 1971-ம் ஆண்டு பந்தைய-கேளிக்கை வரி (திருத்த) சட்டமுன் வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, தமிழ் நாடு 1971-ம் ஆண்டு பந்தைய-கேளிக்கை வரி (திருத்த) சட்டமுன் வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு 1971-ம் ஆண்டு பந்தைய-கேளிக்கை வரி (திருத்த) சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

(5) 1971-72-ம் ஆண்டிற்கான செலவு குறித்த முதல் துணை நிதி அறிக்கை அளித்தல்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பேரவைத் தலைவர் அவர்களே, 1971-72-ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளை இம் மன்றத்தின்கண் வைக்க முன்வந்துள்ளேன். மானியக் கோரிக் கைகளை விளக்கும் விரிவான அறிக்கை ஒன்றும் இம்மன்றத் தின்முன் வைக்கப்பட்டுள்ளது. மானியக் கோரிக்கைகளின் மொத்தத் தொகை ரூ. 14.45 கோடியாகும். இதில் . 7.32 கோடி வருவாய்க் கணக்கின் கீழ் வருவதாகும். எஞ்சிய தொகை, மூலதன, கடன் கணக்குகளைச் சார்வதாகும். இந்தத் துணை மதிப்பீடு எங்ஙனம் ரூ. 14.45 கோடி ஆயிற்று என்பதற்குச் சில செலவினங்களைச் சுட்டிக்காட்டுவது எனது கடமை எனக் கருதுகிறேன்.

இந்திய அரசு கிராமப்புற வேலை வாய்ப்புக்கான திட்டத்திற்கு முதலில் ஒதுக்கிய தொகை நமது மாநிலத்தின் ஊராட்சி ஒன்றியங்களின் எண்ணிக்கையையும் மக்கள் தொகையையும்